20.11.2025 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி. (ஒ.எஸ்.எண். 31 /2021) திரு.ஆறுமுகச்சாமி.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -</u>

1) 1ம்பிரதிவாதி பாலு என்ன தொழில் செய்கிறார் என்றால் தெரியாது. 2ம்பிரதிவாதி செல்லச்சாமி என்ன தொழில் செய்கிறார் என்றால் தெரியாது. 2ம்பிரதிவாதி ஆடு,மாடுகள் வளர்க்கவில்லை என்றால் 1ம்பிரதிவாதி தான் வளர்த்தார், 2ம்பிரதிவாதி வளர்க்கவில்லை. எனது வழக்கில் போரவர்கள்,வருபவர்கள் ஜாடை, மாடையாக பேசி வருவதை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. இந்த வழக்கில் ஜெயா தொலைகாட்சியில் உள்ள இயக்குநர், நிர்வாக இயக்குனரையோ தொலைகாட்சி நிருபரையோ, நிர்வாகியோ வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என்னைபற்றிய செய்தி தொலைகாட்சியில் பார்த்தாக சொல்லியுள்ளது எத்தனை மணிக்கு பார்த்தேன் என்றுசொல்லவில்லை என்றால்சரிதான். என்னை பற்றி அவதுாராக தொலைகாட்சியில் செய்தி பரப்பியது பற்றி ஆவணமாக வழக்கில்தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு நிலபுலன்கள் உள்ளதா என்றால்இல்லை நான் கூலிவேலை தான் செய்கிறேன். எங்கள் ஊரில் நல்லது கெட்ட நிகழ்சியில் கலந்து கொள்வேன் என்றால் ஆமாம் போவேன். என்னை அவமதித்து ஊரில் உள்ளவர்கள் அழைக்காமல் இல்லை என்றால் சரிதான் சமுதாயத்தில் உள்ளவர்கள் அழைக்கும் நிகழ்ச்சிக்குசெல்வேன். தற்போதும் ஊரில் உள்ளவர்கள் மறியாதையாக வைத்துக்கொள்வார்கள் என்றால் எப்போதுமே வைத்துக்கொள்வார்கள். எங்கள் ஊரில் பூணை ராஜ்,பார்கணேசன் அவர்கள் சட்டவிரோதமாக சில செயல்களை செய்ததால் ஊர் மக்கள் சிலர் புகார்கள் கொடுத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.கோவில்பட்டி காவல்நிலையத்தில் பணிபுரியும் சிறப்பு கண்காணிப்பாளர் எவ்வளவு காலமாக பணிசெய்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் ரியல் எஸ்டேட் தொழில் செய்துவருகிறார்கள் என்றால்அதுபற்றி எனக்கு தெரியாது. 1,2 பிரதிவாதிகள் எவ்வளவு காலத்திற்கு முன்பு ஊரை விட்டு சென்றார்கள் என்றால் வருவதும் போவதுமாக இருப்பார்கள். பாலு எந்த ஊரில் இருக்கிறார் என்றால் மந்தித்தோப்பில் தான் இருக்கிறார்.

2) பிரதிவாதிகள் தற்போது மந்திதோப்பில் குடியிருந்து வருவதாக சொல்லுவது உண்மையல்ல என்றால் சரியல்ல வருகிறார்கள். 1ம்பிரதிவாதி பாலு கும்பகோணத்தில்

கடந்த 5,6 வருடங்களாக இருந்து வருகிறார் என்றாலும் 2ம் பிரதிவாதியும் கடந்த 5,6 வருடங்களாக சென்னையில் வசித்து வருகிறார் என்றால் இல்லை முதலில் அவரது மனைவி சென்றார் 2,3 வருடங்களுக்கு முன்பு தான் பிரதிவாதியும் சென்றார். என் மீதும், எனது மனைவி மீதும் போடப்பட்ட வழக்கிற்கு நீதிமன்றத்தில் ஆஜராகி வருகிறேன் என்றால் சரிதான்.எஸ். எஸ்.ஐ.சங்கருக்கு 2ம்பிரதிவாதி ரூ.50,000/- கடன் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. 1ம்பிரதிவாதி காவல் துணை கண்காணிப்பாளர் எனது சட்டவிரோத செயல்களுக்கு துணை போவதாக புகார் மனுக்கொடுத்த விவரம் தெரியுமா என்றால் அதுசம்பந்தமான விசாரணைக்கு நான் சென்றேன். விசாரித்தார்கள் அதற்கு நான் பதில்சொன்னேன். நான், பூணைராஜ்,பார்கணேசன் ஆகியோகள் சட்டவிரோத செயல்களுக்கு துணைகாவல் கண்காணிப்பாளர்,சிறப்பு உதவி ஆய்வாளர் சங்கர் ஆகியோர்கள் துணை போனது சம்பந்தமாக 1ம்பிரதிவாதி சென்னை தலைமை செயலகத்தின் முன்பு ஆர்பாட்டம் செய்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் கஞ்சா வியாபாரம் நடைபெற்று வருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சட்டவிரோத செயல்களில் நானும் மேலே சொன்ன நபர்களும் செயல்பட்டதால் 1ம்பிரதிவாதி புகார் கொடுத்தும் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் என்னுடைய ஏற்பாட்டின்பேரில் பல வழக்குகள் பிரதிவாதிகளுக்கு எதிராக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காவல் துறையினர் தொடர்ந்து என்னுடைய தூண்டுதலின் பேரில் பிரதிவாதிகளை இடையூறு செய்ததால்பிரதிவாதிகள் தலைமை செயலகத்தில் பாதுகாப்பு கோரி புகார் செய்தார்கள் என்றால் சரியல்ல. பிரதவாதிகளின் புகாரின் அடிப்படையில் தான் துணை கண்காணிப்பாளரை இடமாற்றம் செய்தார்கள் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் கொடுத்த பொய்யான புகார் மனுக்களுக்காகவும், எனக்கு பயந்தும் பிரதிவாதிகள் ஊரை விட்டு வெளியேறி சென்று விட்டார்கள் என்றால் சரியல்ல.

3) எனது பிராதில் தொலைகாட்சியில் வந்த செய்தியினால் எனக்கு மதிப்பும் மறியாதையும் குறைந்து விட்டதாக சொல்லியுள்ளது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. அந்த செய்தி எங்குவைத்து எடுத்தார்கள என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் மூலம்06.01.2021ல் அறிவிப்பு அனுபபியதாக சொல்லுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. அவ்வாறு அறிவிப்பு

அனுப்பப்பட்டியிருந்தால் அந்த அறிவிப்பில் வழக்கறிஞர் கையெழுத்தோ அல்லது தரப்பினரான எனது கையெழுத்தும் இருந்திருக்கும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதாக ஒப்புதல் அட்டை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஒப்புதல் அட்டை தாக்கல் செய்யாமல் அஞ்சலக அலுவலகத்தின் மூலம் அனுப்பியதாக அஞ்சலக டிராக்கிங் லிஸ்ட் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஜெயா தொலைக்காட்சியில் செய்தி வெளியிட்டது சம்பந்தமாக மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகார் மனுவிற்கு விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார் மனு 17.10.2020ம் தேதியிட்டு கொடுத்துள்ளேனா என்றால் சரிதான். அந்த மனுவின் மீது நடைபெற்ற விசாரணையில் நான் எந்த தவறும் செய்யவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லுவது போன்று எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் மூலம் எந்த வித அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றும் நான் அனுப்பியதாக சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. எந்த தேதியில் தொலைக்காட்சிக்கு பிரதிவாதி பேட்டி கொடுத்தாக பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக வழக்கிற்கு முன்னிட்டு பிரதிவாதிகளுக்கு சட்டப்படியான அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. பிராதில் சொல்லியுள்ள பிரதிவாதிகளுக்கு எதிரான அனைத்து சங்கதிகளும் உண்மையல்ல என்றால் சரியல்ல.எனது வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
20.11.2025.